**செய்தி வெளியீடு** **நாள்: 16.02.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் சிஎம்டிஏ சார்பில் சென்னையில் கட்டப்பட்டு வரும் 10 "முதல்வர் படைப்பகங்கள்" பொது மக்கள் மற்றும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வரப்படும்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி** இன்று (16.02.2026) சிஎம்டிஏ சார்பில் வேளச்சேரி சட்டமன்ற தொகுதிக் பட்ட அடையார், **காந்தி நகர்** பொது நூலகத்தையும், **இந்திரா நகர்** பொது நூலகத்தையும், மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட **ராஜா அண்ணாமலைபுரம்** பொது நூலகத்தையும், **ஆழ்வார்பேட்டை**, கவிஞர் பாரதிதாசன் சாலையிலுள்ள பொது நூலகத்தையும் **மேம்படுத்தப்பட்டு வரும் "முதல்வர் படைப்பகங்களின்"** முன்னேற்றப் பணிகள் குறித் , மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி, லஸ் நிழற்சாலையில் கட்டப்பட்டுவரும் **"புதிய பல்நோக்கு மையம்"** முன்னேற்றப் பணிகள் குறித்தும் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட **சேத்துப்பட்டு பசுமை பூங்காவின்** முன்னேற்றப் பணிகள் குறித்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

சென்னையில் உள்ள பட்டதாரி இளைஞர்கள் மற்றும் பெண்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் படிப்பதற்கு ஒரு நல்ல சூழலை ஏற்படுத்தித் தருகின்ற வகையில் சிஎம்டிஏ சார்பில் **"முதல்வர் படைப்பகங்கள்"** கட்டப்பட்டு வருகிறது. அந்த வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.40 கோடி செலவில் 8 இடங்களிலும், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் 30 இடங்களில் **"முதல்வர் படைப்பகங்கள்"** அமைக்கப்பட்டு வரும் நிலையில் விரைவில் 10 **"முதல்வர் படைப்பகங்கள்"** பொது மக்கள் மற்றும் மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்கு திறக்கப்பட உள்ளது.

இந்த ஆய்வுகளின்போது, மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. மயிலை த. வேலு, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.ரவிச்சந்திரன், மண்டலக் குழுத் தலைவர் திரு.துரைராஜ், சிஎம்டிஏ மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பொது மேலாளர் திரு.ஆண்டனி சேவியர், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு.கவிதா, மாமன்ற உறுப்பினர் திரு.பரிதி இளம்சுருதி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified @ RealEstate ™